# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 190/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 4<br>Defense<br>Court |
| Name | திரு. பெருமாள் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of November 2024.

நான் மூலைக்கரைப்பட்டி வசித்து வருகிறேன். லோடு ஆட்டோ ஓட்டி வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.1** ஆகும். கடந்த 19.01.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு பஜாரில் மக்கள் நல மருத்துவமனை அருகே லோடு இறக்கி கொண்டிருக்கும்போது காவல் ஆய்வாளர் வேண்டுகோளின் படி கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். எதற்காக கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்று தெரியவில்லை. வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

19.01.2017 ஆம் தேதி 22.30 மணிக்கு சம்பவ இடமான மூலைக்கரைப்பட்டி மக்கள் நல மருத்துவமனை மற்றும் அதன் சுற்றுபுறங்களையும் டார்ச் லைட் உதவியுடன் நாங்குநேரி வட்ட காவல் ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை

மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மூலைக்கரைப்பட்டி பஜார் சாலை தென் வடமாக செல்லும் சாலை என்றால் சரிதான். பிரதான சாலையில் வைத்துதான் லோடு இறக்கிகொண்டிருந்தேன் என்றால் சரிதான். லோடு இறக்கிகொண்டிருக்கும்போதுதான் போலிஸார் கையெழுத்து கேட்டார்கள்.